**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 174/2019**

**வா.சா.1 – C. சுப்பிரமணியம்**

**24-04-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. மின் இணைப்பு எண். 221 வழக்கு தாக்கல் செய்வதற்கு எவவளவு வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாங்கப்பட்டது எப்போது என்று ஞாபகம் இல்லை. அதன் விண்ணபத்தைப் பார்த்தால் என்ன கிணற்றிற்க்கு மின் இணைப்பு கோரப்பட்டது என்று தெரியும் என்றால் தெரியும். விண்ணபத்தை வாங்கி கொடுப்பதற்கு தயாராக உள்ளேன் என்று ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளதால் அதனை வாங்க ஒப்படைக்கமுடியுமா என்றால் மின்வாரியத்தில் அதற்கு விண்ணப்பம் கொடுத்துள்ளேன் தேடிதருவதாக கூறியுள்ளார்கள். நான் விண்ணப்பம் கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. அந்த மின் இணைப்பு எனது அம்மா சரசாத்தாள் பெயரில் உள்ளது.

7. எனது பெயருக்கு எப்போது மாற்றினேன் என்றால் ஞாபயம் இல்லை. அம்மா பெயரில் வாங்கியதற்கு ஆதாரம் இல்லை. 221 மின் இணைப்பு 86/4 காலையின் கிணற்றிக்கு தான் வாங்கப்பட்டது என்றால் 207/3 காலையில் தான் மேற்படி மின் இணைப்பு உள்ளது. ஆரம்பத்தில் 86/4 ல் தான் இருந்தது என்றால் சரியல்ல. 2018 ம் ஆண்டு வரை மேற்படி மின் இணைப்பு 86/4 காலையில் தான் இருந்ததது என்றால் அப்போது ஆண்லைனில் தவறாக பதிவு செய்துவிட்டார்கள். அதனால் சரிசெய்யப்பட்டது. எப்போது திருத்தினேன் என்று ஞாபகம் இல்லை. தற்போது ஆண்லைனில் வாங்கினால் திருத்தப்பட்டது வருமா என்றால் வரும். வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்தில் கிணற்றுப்பாப்பேரியில் கிழபுரத்து பாம்பேரியில் C பாகஸ்தர் ஆயில் எஞ்ஞின் வைத்துக்கொள்ளவேண்டியது மேல்புரத்து பாம்பேரியில் வடகோடாக A பாகஸ்தரும் தென்புரமாக E பாகஸ்தரும் ஆயில் என்ஞ்ஞின்

வைத்துக்கொள்ளம்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் படி தான் தனித்தனியாக ஆயில் எஞ்ஜின் வைத்து வந்தோம் என்றால் சரிதான்

8. 146 மின் இணைப்புக்கு உண்டான மோட்டார்ல கிழபுரம் பாம்பேரில் உள்ளது என்றால் சரிதான். அந்த மின் இணைப்புக்கு உண்டான மின் கம்பம் பிரதிவாதியின் பூமியில் உள்ளது என்றால் பொது இடத்தில் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும் மின் கம்பம் பிரதிவாதியின் பூமியில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 221 மின இணைப்புக்கான அட்டை எனது தாயார் பெயரில் இருந்து எனது பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். அந்த மின் அட்டையை பார்த்தால் எந்த சர்வே எண்ணில் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று தெரியும் என்றால் மின் அட்டை என்னிடம் இல்லை. அனைத்தும் கணினிமையம் ஆக்கப்பட்டுவிட்டது. பழைய அட்டை தொலைந்து விட்டது. பழைய அட்டை உள்ளது என்றும் அதனை தாக்கல் செய்தால் எனக்கு எதிராகும் என்பதால் மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

9. 1960 பாத்திரத்தில் யார்யாருக்கு என்ன பாகம் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்துக்காண்பித்தால்தான் தெரியும். எனது அம்மா பூமியை எப்போது வாங்கினார் என்று ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. படித்து காண்பித்துள்ளார்களா என்றால் படித்துக்காண்பித்தார்கள் தற்போது ஞாபகம் இல்லை. எந்த வருடம் எங்கள் குடும்பத்தில் பாகம் பிரித்துக்கொண்டோம் என்று ஞாபகம் இல்லை. அந்த பத்திரத்தில் பிரதிவாதிகள் மற்றும் அவரது தகப்பனார் பொன்னுசாமி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். எனது குடும்பத்திற்குள் ஏற்ப்பட்ட பத்திரம் பொன்னுசாமி குடும்பத்தை கட்டுப்படுத்தாது என்றால் நாங்கள் தனியாக அவர்கள் தனியாக வங்கினோம் கிணறு மட்டும் பொதுவாக உள்ளது. வா.சா.ஆ.3 மின் அட்டை மற்றும் மின் இரசீது பொன்னுசாமியின்

பெயரில் உள்ளது என்றால் பழனிச்சாமி என்ற பெயரை பொன்னுசாமி என்று மாற்றியுள்ளார்கள்.

10. பழனிச்சாமி யார் என்றால் தெரியாது. 146 மின் இணைப்பு பொன்னுசாமி பெயரில் அவரால் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அவரால் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பழனிச்சாமி பெயரில் இருந்த மின் இணைப்பை வழக்கு தாக்கல் செய்தபிறகு பொன்னுசாமி என்று மாற்றியுள்ளார்கள். அதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதிர்ப்புதான் தெரிவித்துள்ளேன். நான் எதிர்ப்பு தெரிவித்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அதனை மின் அலுவலகத்தில் கொடுத்துள்ளேன். மின் அலுவலகத்தில் இருந்த எனது எதிர்ப்பை வாங்கி ஒப்படைக்க முடியுமா என்றால் அவர்கள் பெயரில் மாற்றிவிட்டதால் அவர்களால் தான் கொடுக்க முடியும். நான் சொல்வதுபோல் எவ்வித ஆட்சேபணையும் கொடுக்கவில்லை என்றும் பொன்னுசாமி பெயரில் தான் மின் இணைப்பு பெரப்பட்டது என்றால் சரியல்ல.

11. 146 மின் இணைப்பு பொன்னுசாமி கவுண்டரால் பெறப்பட்டு தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்து தற்போது பிரதிவாதி பாலசுப்பிரமணியத்தில் அனுபவத்தில் உள்ளது என்றால் 30 வருடமாக மூவரும் பொதுவில் தான் அனுபவித்து வருகிறோம். அவ்வாறு நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2 நாட்களுக்கும் 2,3 வாதிகள் 2 நாட்களுக்கும் மின் இணைப்பை உபயோகித்து வந்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மின் இணைப்பு உயயோகித்து வந்ததாகவும் அதனை பிரதிவாதி இடையூரு செய்ததாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. 2021ம் ஆண்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்ததில் எனது உரிமையை மறுத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. எனது உரிமையை மறுத்து எதிர்வாதம் போட்டபிறகு விளம்புகை பரிகாரம் நான் கேட்கவில்லை

என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உரிமையும் அனுபவமும் இல்லாத சொத்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யதது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.